ம.பி. மாநிலங்களவை இடைத்தேர்தல்: மத்திய அமைச்சர் புரி வேட்புமனு தாக்கல்



மத்திய பிரதேச மாநிலம் போபாலில் மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்ய சனிக்கிழமை வந்த மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி.

போபால், அக். 31: மத்திய பிரதேச மாநிலங்களவை இடைத்தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிடும் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி சனிக்கிழமை தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சராகப் பதவி வகித்து வந்த எல்.முருகன், தமிழகத்தில் பாஜகவை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தவிருப்பதாகக் குறிப்பிட்டு, தனது அமைச்சர் பதவி மற்றும் மாநிலங்களவை எம்.பி. பதவியை கடந்த அக்.13-ஆம் தேதி ராஜிநாமா செய்தார். அவரது ராஜிநாமா கடிதத்தை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஏற்றுக் கொண்டார்.

மத்திய பிரதேசத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்டு மாநிலங்களவை எம்.பி.யாக பதவிவகித்த எல்.முருகனின் பதவிக் காலம், 2030, ஏப்.2-ஆம் தேதிவரை இருந்தது. அவரது ராஜிநாமாவால் காலியான அந்த எம்.பி. இடத்துக்கு நவ.12-ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது.

மத்திய அமைச்சர் போட்டி: இத்தேர்தலில் ஆளும் பாஜக வேட்பாளராக மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி போட்டியிடுகிறார். போபாலில் உள்ள சட்டப் பேரவையில் சனிக்கிழமை அவர் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். அப்போது, மாநில முதல்வர் மோகன் யாதவ், மாநில பாஜக தலைவர் ஹேமந்த் கண்டேல்வால் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

230 உறுப்பினர்களைக் கொண்ட மத்திய பிரதேசத்தில் பாஜகவின் பலம் 164-ஆக உள்ளது. எனவே, அக்கட்சியின் வேட்பாளர் எளிதாக வெற்றி பெறுவார். மத்திய பிரதேசத்தில் மொத்தமுள்ள 11 மாநிலங்களவை இடங்களில் பாஜகவுக்கு 7, காங்கிரஸுக்கு 3 எம்.பி.க்கள் உள்ளனர்.

இந்திரா காந்தி நினைவு தினம்: காங்கிரஸ் தலைவர்கள் அஞ்சலி



புது தில்லியில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்திய சோனியா காந்தி, ராகுல்.

புது தில்லி, அக். 31: மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 42-ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, அவருக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் சனிக்கிழமை அஞ்சலி செலுத்தினர்.

நாட்டின் முதல் மற்றும் ஒரே பெண் பிரதமர் என்ற பெருமைக்குரிய இந்திரா காந்தி, ஜவாஹர்லால் நேரு-கமலா நேரு தம்பதியருக்கு கடந்த 1917, நவ.19-இல் பிறந்தவர். கடந்த 1966 முதல் 1977 வரையும், 1980 முதல் 1984, அக்.31-ஆம் தேதி தனது சீக்கிய மெய்க்காவலர்களால் சுட்டுக் கொல்லப்படும் வரையும் பிரதமராக பதவி வகித்தார்.

இந்திரா காந்தியின் நினைவு தினம் சனிக்கிழமை (அக்.31) அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, தில்லியில் உள்ள அவரது நினைவிடமான சக்தி ஸ்தலத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலர் கே.சி.வேணுகோபால் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். மேலும், இந்திரா காந்தியின் அதிகாரபூர்வ இல்லமாக இருந்த சஃப்தர்ஜங் சாலையில் உள்ள 'இந்திரா காந்தி நினைவில்லத்திலும்' காங்கிரஸ் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

ஸ்லோகத்தைப் பகிர்ந்த ராகுல்: தனது பாட்டி இந்திரா காந்தி கற்றுக் கொடுத்த சம்ஸ்கிருத ஸ்லோகம் ஒன்றை எக்ஸ் தளத்தில் ராகுல் பகிர்ந்துள்ளார்.

பிருஹதாரண்யக உபநிஷதத்தில் இடம்பெற்ற 'அஸதோ மா ஸத்கமய, தமஸோ மா ஜ்யோதிர்கமய, ம்ருத்யோர் மா அம்ருதம் கமய, ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி ஹி' என்ற அந்த ஸ்லோகம், 'பொய்யில் இருந்து என்னை உண்மையை நோக்கி வழிநடத்துங்கள், இருளில் இருந்து ஒளியை நோக்கி வழிநடத்துங்கள், மரணத்தில் இருந்து அழியா நிலைக்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று பொருள்படுவதாகும்.

தனது பாட்டியின் மிக அழகான, தான் நினைத்துப் பார்த்திராத பரிசு இது என்று குறிப்பிட்டுள்ள ராகுல், 'உங்கள் (இந்திரா காந்தி) மடியில் அமர்ந்து, உங்களின் கைகளைப் பற்றிக் கொண்டு, உங்களின் இந்த வார்த்தைகளைக் கவனித்திருக்கிறேன். நீங்கள் கூறியதைக் கேட்டு, நானும் திரும்பக் கூறியிருக்கிறேன்' என்று பதிவிட்டுள்ளார்.

இதேபோல், இந்திரா காந்தியுடன் தான் இருக்கும் குழந்தைப் பருவ புகைப்படத்தை காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி பகிர்ந்துள்ளார்.

கார்கே புகழஞ்சலி: கார்கே வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அசைக்க முடியாத தைரியம், தளராத உறுதி, தொலைநோக்குப் பார்வைமிக்க தலைமையத்துவத்தின் அடையாளம் இந்திரா காந்தி. வலிமையான, முற்போக்கான இந்தியாவை கட்டமைப்பதில் அவரது மகத்தான பங்களிப்புகள் நீண்ட பாரம்பரியமாகத் தொடர்கிறது. நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கான அவரது மேலான தியாகம் நமது நினைவைவிட்டு என்றென்றும் அகலாது' என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

மணிப்பூர் முதல்வர் பதவி விலகக் கோரி மைதேயி சமூகத்தினர் பேரணி

இம்பால், அக். 31: மணிப்பூரில் தொடரும் வன்முறையை சுட்டிக் காட்டி, அந்த மாநில முதல்வர் பதவி விலகக் கோரி, இம்பாலில் மைதேயி சமூகத்தினர் சனிக்கிழமை பேரணி நடத்தினர்.

மணிப்பூரில் கடந்த 2023-ஆம் ஆண்டில் மைதேயி, குகி சமூகத்தினர் இடையே பெரும் கலவரம் மூண்டது. பல மாதங்கள் நீடித்த இந்தக் கலவரத்தில் அப்பாவி மக்கள் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஏராளமானோர் மாயமாகினர். பல ஆயிரம் பேர் வீடுகளைவிட்டு வெளியேறி அரசு முகாம்களில் தஞ்சமடைந்தனர்.

இதையடுத்து மத்திய அரசு, மாநில அரசு எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக அங்கு படிப்படியாக அமைதி திரும்பினாலும் அவ்வப்போது மோதலும் தொடர்ந்து வருகிறது. அண்மையில் மைதேயி சமூகத்தினர் 14 பேரை குறிவைத்து தீவிரவாதிகள் நடத்தியத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தால் மணிப்பூரில் மீண்டும் பதற்றம் நிலவுகிறது.

இந்த நிலையில், மணிப்பூரில் தொடரும் வன்முறையை சுட்டிக் காட்டி, அந்த மாநில முதல்வர் பதவி விலகக் கோரியும், பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கோரியும், தீவிரவாத குழுக்களுடன் அரசு செய்து கொண்ட சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரியும், மணிப்பூர் ஒருமைப்பாட்டு குழு சார்பில் இம்பாலில் சனிக்கிழமை பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணிக்கு நாகா ஐக்கிய கவுன்சிலும் ஆதரவு அளித்தது. பேரணியில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு ஊர்வலமாக வந்தனர்.

தமிழ்நாடு கிராம வங்கி
TAMIL NADU GRAMA BANK

கையகப்படுத்தியதற்கான அறிவிப்பு
SECURITY INTEREST (ENFORCEMENT) RULES, 2002 APPENDIX IV {Rule}8(1)}

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் **(SARFAESI Act 2002)** கீழ் அங்கீகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பெற்ற கீழே கையொப்பமிட்டுள்ள, தமிழ்நாடு கிராம வங்கியின் அதிகாரி, மேற்படி சட்டத்தின் கீழ் செக்ஷன் 13(12) மற்றும் செக்யூரிட்டி இன்டரெஸ்ட் அமலாக்கம் 2002 விதி 8 மற்றும் 9ன் கீழ் 20-09-2019 தேதியில் கீழ்க்கண்டவர்களுக்கு கடன் நிலுவைத் தொகையான **ரூ. 82,65,570/- (ரூபாய் எண்பத்திரண்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து ஐந்நூற்று எழுபது மட்டும்)** மற்றும் திருப்பிச் செலுத்தும் நாள் வரை வட்டி மற்றும் இதர செலவுகளைச் சேர்த்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்தக் கோரி ஒரு டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி இருந்தார். மேலும் டிமாண்ட் நோட்டீசை 15-10-2019 அன்று தினசரி நாளிதழில் அறிவிப்பும் செய்திருந்தார்.

கடன்தாரர்:

1. **திருமதி. பெ. சாந்தி க/பெ பழனியப்பன், (கடன்தாரர் மற்றும் M/s சாந்தி டிரேடர்ஸ் நிறுவனத்தின் தனிஉரிமையாளர்)** புதுக்கொட்டாய் காடு, மணிவிழுந்தான் (அஞ்சல்), ஆத்தூர் (வட்டம்), சேலம் (மாவட்டம்) – 636112.
2. **திரு. ப. பெரியசாமி த/பெ பழனியப்ப கவுண்டர் (ஜாமீன்தாரர்)** சீராப்பள்ளி காடு, மணிவிழுந்தான் (அஞ்சல்), ஆத்தூர் (வட்டம்), சேலம் (மாவட்டம்) – 636112.
3. **திரு. பழனியப்பன் த/பெ கந்தசாமி (ஜாமீன்தாரர் மற்றும் காலஞ்சென்ற திரு. கந்தசாமி (மறைந்த பிணையாளர் மற்றும் அடமானதாரர்)** அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு) புதுக்கொட்டாய் காடு, மணிவிழுந்தான் (அஞ்சல்), ஆத்தூர் (வட்டம்), சேலம் (மாவட்டம்) – 636112.
4. **திருமதி. நல்லம்மாள் க/பெ கந்தசாமி (காலஞ்சென்ற திரு. கந்தசாமி (மறைந்த பிணையாளர் மற்றும் அடமானதாரர்)** அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு) புதுக்கொட்டாய் காடு, மணிவிழுந்தான் (அஞ்சல்), ஆத்தூர் (வட்டம்), சேலம் (மாவட்டம்) – 636112.
5. **திரு. செட்டியண்ணன் த/பெ கந்தசாமி (ஜாமீன்தாரர் மற்றும் காலஞ்சென்ற திரு. கந்தசாமி (மறைந்த பிணையாளர் மற்றும் அடமானதாரர்)** அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு) புதுக்கொட்டாய் காடு, மணிவிழுந்தான் (அஞ்சல்), ஆத்தூர் (வட்டம்), சேலம் (மாவட்டம்) – 636112.
6. **திரு. மாரிமுத்து த/பெ கந்தசாமி (ஜாமீன்தாரர் மற்றும் காலஞ்சென்ற திரு. கந்தசாமி (மறைந்த பிணையாளர் மற்றும் அடமானதாரர்)** அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு) புதுக்கொட்டாய் காடு, மணிவிழுந்தான் (அஞ்சல்), ஆத்தூர் (வட்டம்), சேலம் (மாவட்டம்) – 636112.

கடன் பெற்றவர்/ உத்திரவாதம் அளித்தவர் மணிவிழுந்தான் கிளைக்கு கடன் தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மேலே குறிப்பிட்ட சட்டங்களின் பிரிவு 13 (4), விதிகள் 8 மற்றும் 9ன் படி தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி சொத்துக்களை **27-10-2026** அன்று கையகப்படுத்தியுள்ளார் என்பதை கடன் பெற்றவர், உத்திரவாதம் அளித்தோர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கிறார்.

குறிப்பாக கடன் பெற்றோருக்கும், உத்திரவாதம் அளித்தவருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் கீழ்க்கண்ட சொத்தின் மீது எவ்வித தொடர்பும் மேற்கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கப்படுவதுடன் அவ்வாறு தொடர்பு மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அதில் தமிழ்நாடு கிராம வங்கிக்கு கடனாளி செலுத்த வேண்டிய மேற்படி நோட்டீஸில் குறிப்பிட்டுள்ள **27-10-2026** அன்று கடன் நிலுவைத் தொகையான **ரூ.2,50,44,567/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஐந்நூற்று அறுபத்து ஏழு மட்டும்)** மற்றும் கடன் தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தும் நாள்வரை வட்டி மற்றும் இதர செலவுகளைச் சேர்த்து மேற்சொன்ன தொகைக்கு கட்டுப்பட்டவை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

அசையா சொத்துக்களின் விவரம்

முதன்மை பத்திரத்தில் உள்ள நிலமானது சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், தலைவாசல் துணைப்பதிவு மாவட்டம், ஆத்தூர் தாலுக்கா, தலைவாசல் கிராமத்தில் அமைந்துள்ளது.

1. சர்வே எண். 42/9 (பழைய சர்வே எண். **42/6A1) எல்லைகள் –** 1 வது அயிட்டம்: பத்மினி நிலத்திற்கு கிழக்கு, சினிமா தியேட்டருக்கு மேற்கு, மணி நிலத்திற்கு வடக்கு மற்றும் 2வது அயிட்டத்திற்கு தெற்கு. 2 வது அயிட்டம்: 1வது அயிட்டத்திற்கு வடக்கு, சின்னசாமி நிலத்திற்கு தெற்கு, பத்மினி நிலத்திற்கு கிழக்கு, கிழமேல் 10அடி அகல தென்வடல் பொது வண்டி வழிப்பாதைக்கு மேற்கு. **அளவுகள்** 1வது அயிட்டம் : கிழமேல் வடக்கே 34', கிழமேல் தெற்கே 33', தென்வடல் 106' மொத்தம் 3351சதுர அடி. 2வது அயிட்டம்: தென்வடல் மேற்கே 61', தென்வடல் கிழக்கே 62 3/4', கிழமேல் வடக்கே 56', கிழமேல் தெற்கே 54', மொத்தம் 3419 சதுர.அடி மொத்தம் 6970சதுர அடி.
2. சர்வே எண். 42/9 (பழைய சர்வே எண். **42/6A1) எல்லைகள் –** 3 வது அயிட்டம்: சின்னசாமி பூசாலி மற்றும் மற்றவர்களின் நிலத்திற்கு கிழக்கு, சசிகலா மற்றும் மோகன் பிளாட்டிற்கு மேற்கு ரோட்டிற்கு தெற்கு, சினிமா தியேட்டருக்கு வடக்கு, **அளவுகள்** 3வது அயிட்டம்: கிழமேல் 10அடி, தென்வடல் 179அடி மொத்தம் 1790சதுர.அடி **ஆகமொத்தம் 8760சதுர.அடி.**

தேதி : 27.10.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : நாமக்கல் தமிழ்நாடு கிராம வங்கி

சித்தராமையாவுக்கு எதிரான ரகசிய காணொலி சர்ச்சை

காங்கிரஸ் முன்னாள் பொதுச் செயலாளர் கிருபா ஆல்வா கட்சியில் இருந்து நீக்கம்



கிருபா ஆல்வா

பெங்களூரு, அக். 31: கர்நாடக முன்னாள் முதல்வர் சித்தராமையாவுக்கு எதிரான ரகசிய காணொலி சர்ச்சை தொடர்பாக, காங்கிரஸ் முன்னாள் பொதுச் செயலாளர் கிருபா ஆல்வா கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் முதல்வர் சித்தராமையா தொடர்பான ரகசிய காணொலி அண்மையில் சமூக ஊடகங்களில் வெளியாகி கர்நாடக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தின் பின்னணியில் காங்கிரஸ் கட்சியினர் இருப்பதாக சித்தராமையாவின் மகனும், அமைச்சருமான யதீந்திரா சித்தராமையா குற்றம்சாட்டியிருந்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக செய்தி வெளியிடுவதற்கும், சமூக ஊடகங்களில் அவதூறு பரப்புவதற்கும் நீதிமன்றத்தில் சித்தராமையா தடை உத்தரவு பெற்றிருந்தார். மேலும், இந்த விவகாரத்தை விசாரணை நடத்த காவல் துறைக்கு கர்நாடக அரசு உத்தரவிட்டிருந்தது.

இதனிடையே, இந்த ரகசிய காணொலி தொடர்பாக விசாரணை நடத்திய பெங்களூரு காவல் துறையினர், அதில் இடம்பெற்றுள்ள பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட புனையப்பட்ட தகவல் என்று வியாழக்கிழமை தெரிவித்திருந்தது. காணொலியில் குறிப்பிட்டுள்ள சம்பவம் உண்மையில் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் எதுவும் விசாரணையில் கிடைக்கவில்லை என்றும், விசாரணையின்போது பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் அத்தகைய சம்பவம் நடைபெற்றதை உறுதிப்படுத்தவில்லை என்றும் காவல் துறையினர் தெரிவித்திருந்தனர்.

இந்த விவகாரத்தின் பின்னணியில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கிருபா ஆல்வாவுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து, இந்த விவகாரம் குறித்து விளக்கம் கேட்டு கிருபா ஆல்வாவுக்கு கர்நாடக மாநில காங்கிரஸ் நோட்டீஸ் அனுப்பியிருந்தது. ஆனால், அந்த நோட்டீஸ் மீது கிருபா ஆல்வா இதுவரை எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை.

இதையடுத்து, கர்நாடக மாநில காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் எம்.நாராயணசாமி சனிக்கிழமை வெளியிட்டுள்ள உத்தரவில், ரகசிய காணொலி விவகாரத்தில் கிருபா ஆல்வாவின் பெயர் இடம் பெற்றுள்ளதுடன், அவரது செயல்பாடுகள் கட்சிக்கு எதிரான நடவடிக்கையாக கருதப்படுகின்றன. இந்த விவகாரத்தால் ஊடகங்களில் எதிர்மறையான செய்திகள் வெளியாகி கட்சிக்கு தர்மசங்கடம் ஏற்பட்டுள்ளது.

எனவே, கட்சியின் மாநிலத் தலைவர் பி.கே.ஹரிபிரசாத்தின் உத்தரவின்பேரில், கிருபா ஆல்வா உடனடியாக 6 ஆண்டுகளுக்கு காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் நடந்தது என்ன என்பது குறித்து கட்சி மேலிடத் தலைவர்களைச் சந்தித்து விளக்கம் அளிக்க சித்தராமையா தில்லி செல்ல திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அர்னாப் புயல் பாதிப்பு

ஆந்திரத்தில் மத்திய குழு ஆய்வு தொடக்கம்

அமராவதி, அக்.31: அர்னாப் புயல் பாதிப்புகளை ஆய்வு செய்வதற்கான மத்திய குழு ஆந்திர மாநிலத்தை சனிக்கிழமை வந்தடைந்தது.

இதுதொடர்பாக ஆந்திர அரசு சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'மத்திய உள்துறை அமைச்சக கூடுதல் செயலர் சித்தரஞ்சன் தாஸ் தலைமையிலான 7 நபர் குழு அடுத்த இரண்டு நாள்களுக்கு மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு புயல் சேதத்தை கணக்கெடுக்கும் பணியில் ஈடுபடவுள்ளது.

இந்நிலையில், அர்னாப் புயலால் 3.52 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான பயிர் நிலங்கள், 2,500 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 7,000 வீடுகள் சேதமடைந்து 12 மாவட்டங்களில் ரூ.4,764 கோடி வரை இழப்பு ஏற்பட்டதாக மத்திய குழுவைச் சந்தித்த ஆந்திர அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். புயலால் 4.63 லட்சம் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்' எனத் தெரிவிக்கப்பட்டது.

வங்கக் கடலில் உருவான அர்னாப் புயல், ஆந்திரத்தின் பாபட்லா மற்றும் விசாகப்பட்டினம் இடையே உள்ள ஏனாம் (புதுச்சேரி யூனியன் பிரதேசப் பகுதி) அருகே புதன்கிழமை அதிகாலையில் கரையைக் கடந்தது. அர்னாப் புயலால் ஆந்திரம், ஒடிஸா, சத்தீஸ்கர் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச நிர்வாகத்துக்குள்பட்ட ஏனாமில் கடும் சேதம் ஏற்பட்ட நிலையில், மீட்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில்
மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஐந்து ரோடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன்தாரர் : திரு. V. முத்துசாமி, த/பெ. வெள்ளையன், கதவு எண். 2/88, அண்ணா நகர், மஜ்ரா கொல்லப்பட்டி, S.கொல்லப்பட்டி (அஞ்சல்), சேலம் - 636030. **இணைந்து கடன்பெற்றவர் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு : திரு.M.செந்தில்வேலன், த/பெ.V. முத்துசாமி,** கதவு எண். 2/88, அண்ணா நகர், மஜ்ரா கொல்லப்பட்டி, S.கொல்லப்பட்டி (அஞ்சல்), சேலம் - 636030. **சட்டப்பூர்வ வாரிசுகள்: (1) திரு.M.கண்ணன், த/பெ.V. முத்துசாமி,** கதவு எண். 2/88, அண்ணா நகர், மஜ்ரா கொல்லப்பட்டி, S.கொல்லப்பட்டி (அஞ்சல்), சேலம் - 636030. **(2) திருமதி.M.காசியம்மாள், க/பெ.V. முத்துசாமி,** கதவு எண். 2/88, அண்ணா நகர், மஜ்ரா கொல்லப்பட்டி, S.கொல்லப்பட்டி (அஞ்சல்), சேலம் - 636030. **(3) திருமதி.S.கலைச்செல்வி, த/பெ.V. முத்துசாமி,** கதவு எண். 2/88, அண்ணா நகர், மஜ்ரா கொல்லப்பட்டி, S.கொல்லப்பட்டி (அஞ்சல்), சேலம் - 636030. **கடன் நிலுவைத் தொகை : 26.10.2026 வரையில் ரூ.16,73,454.14 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 21.09.2021. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 13.12.2021. சொத்து விபரம் :** சைட் எண்.B-123, நத்தம் S.F. No: 15, கதவு எண்.2/88-93/2, பிளாக் எண்.5, அண்ணா நகர், காந்தி சிலை ரோடு, மஜ்ரா கொல்லப்பட்டி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, சேலம் மேற்கு தாலுக்கா, சேலம் மாவட்டம் 636030. சொத்தின் எல்லைகள் : வடக்கு : சைட் எண்.B-122, தெற்கு : சைட் எண்.B-124, கிழக்கு: சைட் எண்.B-118, மேற்கு : 30 அடி அகலமுள்ள தென்வடல் காலனி வழித்தடம். **காலம்சென்ற திரு.V.முத்துசாமி (லேட்) அவர்களின் பெயரில் சொத்து உள்ளது. காப்பு விலை : ரூ.71,71,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.7,17,100/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 04.12.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன்.** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 24.11.2026 முதல் 01.12.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 01.12.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஐந்து ரோடு கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903007.**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். 2. ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **01.12.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். 3.மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். 4. விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 5. வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். 6. மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஐந்து ரோடு கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903007, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 26.10.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : ஐந்து ரோடு, சேலம் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

தினமணி இணையதளம்
உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...

புதிய வடிவில்... புதிய வண்ணத்தில்...
www.dinamani.com

பாங்க் ஆஃப் பரோடா
ब